ஆராய்ந்து உடனடியாக பரிகாரம் காண அந்தக் குழுவிற்கு அரசாங்கம் ஆணை பிறப்பிக்குமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : காமாலை நோய் வருவதற்குக் காரணம் குடி தண்ணீர் திட்டத்தில் கோளாறு இருந்தால் தான் வர முடியும். இந்தத் திட்டம் வேஸ்டேஜ் வாட்டர் பற்றியதாகும். இந்தக் குழு 18-5-72 அன்றுதான் அமைக்கப்பட்டது. இனிதான் தீவிரமாகப் பரிசீலனையில் ஈடுபடும். தனிப்பட்ட இடத்தில் ஏதேனும் குறை இருந்தால் அதைத் தனியாக பரிசீலிக்கலாம்.

DR. H. V. HANDE : Sir, on a point of order. Now it is exactly 12 Noon and as the House commenced its proceedings at 11 a.m. the Question Hour is supposed to have started at that time and it is customary that after one hour Question-Hour is over. According to the rules, the Speaker has to take the permission of the House to continue the Question Hour. That is the usual procedure. Therefore, I would like to know whether it is in order to continue the Question Hour without taking the permission of the House. . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : கேள்வி நேரத்தை முடித்துவிடலாம்.

Recommendations of Wage Board for Sugar Industry

@ *9 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether any panel has been set up to go into the implementation of the Sugar Wage Board recommendations; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) & (இ) : சர்க்கரைத் தொழிலுக்கான இரண்டாவது ஊதிய வாரியத்தின் பரிவுரைகளைச் செயற்படுத்துவது குறித்து விவாதித்து முடிவு செய்யும் பொருட்டு 1971 அக்டோபரில் சர்க்கரைத் தொழிலுக்கான முத்தரப்புக் குழு ஒன்றை அரசு அமைத்தது. அந்த முத்தரப்புக் குழுவின் அமைப்பாளர் சென்னையிலுள்ள தொழி

@ விதி 35 (4)-இன் கீழ், போடப்படாத வினாக்கள் 9 முதல் 20 வரை நடவடிக்கைக் குறிப்பில் அச்சிடப்பட்டுள்ளன.

1972 டிசம்பர் 2]

லாளர் நலத்துறை துணை ஆணையாளர் ஆவார். அந்த முத்தரப்புக் குழுவில தொழிலதிபர்கள் சார்பில் ஒன்பது பிரதிநிதிகளும், தொழிலாளர்கள் சார்பில் ஒன்பது பிரதிநிதிகளும் உறுப்பினர் களாகவும், சர்க்கரைத்துறை இயக்குநர் கூட்டு உறுப்பினராகவும் இடம் பெற்றனர்.

சர்க்கரைத் தொழிலுக்கான ஊதிய வாரியத்தின் பரிவுரை களைச் செயற்படுத்துவது குறித்து எவ்வித முடிவுக்கும் வர இயலவில்லை என்று முத்தரப்புக் குழுவின் அமைப்பாளர் ஓர் அறிக்கையைப் பணித்தனுப்பினார். நிர்வாகத்தினர், தொழி லாளர்கள் ஆகியோரின் பிரதிநிதிகள் அடங்கிய கூட்டங்களை நான் கூட்டினேன். இறுதியாக 25—2—72-ல் ஓர் உடன்பாடு ஏற்பட்டது.

Expanded Nutrition Programme

*10 Q.—Thiru N. DENNIS: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) the details of the Expanded Nutrition Programme introduced in Madras City; and

(*b*) whether the programme will be extended to other districts in the State?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) பள்ளி செல்லும் வயதடையாக் குழந்தைகளுக்குக் கூடுதலாகச் சத்துணவு வழங்கு வதற்கான சிறப்புச் சத்துணவுத் திட்டம் மத்திய அரசு முழு அளவில் பொறுப்பேற்கும் திட்டமாகும். இத்திட்டம் தமிழ் நாட்டில் 1970, அக்டோபர் முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை இத்திட்டம் மூன்று வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு மட்டும் பொருந்துவதாக இருந்தது. 6 வயதுவரையிலான குழந்தைகள், கர்ப்பிணிகள், கைக்குழந்தைகளுடன் கூடிய தாய் மார்கள் ஆகியவர்களுக்கும் இத்திட்டம் பொருந்துமாறு இந்திய அரசு இத்திட்டத்தை விரிவுப்படுத்தியுள்ளது. இத்திட்டம் சென்னை மாநகரில் 3—4—1972 முதல் செயல்படுத்தப்படுகிறது. விரிவு படுத்தப்பட்ட இத்திட்டத்தின்கீழ் 3—6 வயதுத் தொகுதியின்கீழ் வரும் குழந்தைகளும், குடிசைப் பகுதியில் வாழும் கர்ப்பிணிகள், கைக்குழந்தையுடன் கூடிய தாய்மார்களும் பயனடைகின்றனர். வாரத்தில் 6 நாட்களுக்கு அவர்களுக்கு உணவளிக்கப்படுகிறது. "பால் பெருக்கத்திட்டத்தின்" கீழ் சென்னைமாநகரில் சிறப்புச்